திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காங்கேயம் மாடுகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், அவற்றை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்களுக்கு அந்தக் காளைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து இருக்கும். அந்த மாடுகள் உழவு வேலைகளுக்குத்தான் அதிகம் பயன்படுகின்றன. மேல் நாடுகளில் உழுவதற்கு மாடுகளை பயன்படுத்தும் அவசியமே இல்லை. மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதைக் கண்காட்சியில் வைக்கவேண்டுமானால், அதற்கு நாமே செலவழிக்க வேண்டும்.

துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

*** 160 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஊராட்சி மன்றங்களிலும் நகர் மன்றங்களிலும் பணிபுரியும் துப்பரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு மத்திய அரசு 1970-71, 1971-72-லும் எவ்வளவு தொகை அளித்தது?

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எங்கெங்கே வீடுகள் (1970-72 வரை) கட்டித் தரப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஒவ்வொரு ஆண்டுக்கும் முறையே ரூ. 9,00,000.

(இ) 1970-71.

நகர் மன்றங்கள்—

1. கரூர்—கூரைவரை கட்டிட வேலை முடிந்திருக்கிறது.
2. திருச்சிராப்பள்ளி—வேலை துவக்கப்பட இருக்கிறது.

ஊராட்சி மன்றங்கள்—

பொன்மலை, உப்பிலியாபுரம், கரியமணிகண்டம், தோட்டக் குறிச்சி, பொன்னமராவதி, அன்னவாசல் ஊராட்சிகளில் கட்டிட வேலை முடிந்துவிட்டது. பரத்தியூர், புல்லம்பாடி, பொம்பலூர். வெப்பைக் குடிக்காடு, குழித்தலை ஊராட்சிகளில் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

1972 ஆகஸ்ட் 18]

1971-72—

நகர் மன்றங்கள்—

இல்லை.

ஊராட்சி மன்றங்கள்—

பொன்மலை, அன்னவாசல், பழையஜெயங்கொண்ட சோழபுரம்—கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் பணிக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்கிறதா ? 1972-73-ம் ஆண்டிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972-73 ஆண்டிற்கும் ஏறத்தாழ இதே தொகையை ஒதுக்கியிருக்கிறது.

அனாதை இல்லங்கள்

* 161 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு எந்த அடிப்படையில் அரசு அங்கீகாரம் அளிக்கிறது? எந்த அடிப்படையில் அதற்கான மானியம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு உதவி மானிய விதி தொகுப்பு, படலம் XI -ன்படி, அனாதை இல்லங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 30 மாணவர்களைக் கொண்டதும், ஓராண்டு முழுவதும் நன்முறையாக நடத்தப்பட்டு வருவதாயும், மாணவர்களுக்கு சுகாதார அமைப்புடன் கூடிய இடவசதி, உணவு, தண்ணீர் முதலியன அளிக்கக்கூடியதாயும், அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கல்வி பயில ஏற்பாடுகள் செய்து தரக்கூடியதாயும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு ஜூலை முதல் தேதியன்றும் இல்ல மாணவர்களில் 50 சத வீதத்துக்கு மேற்பட்டவர்கள் ஆதரவற்றவர்கள் எனச் சான்றிதழ் கொண்டவர்களாயும், 5 முதல் 20 வயது வரை